**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**அசல் வழக்கு எண்.** 13/2014

வாக்குமூலம்.பி.வா.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணன் | தொழில் | |
| த/பெ. | சுப்பையா | வயது | 40/ 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 24.06.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் தாவா 2 அயிட்ட சொத்துகளுக்கு உரிமை கோருகிறேன். எனது தந்தைவழி பாட்டி சிவகாமி தாவா சொத்தை குப்பமாளிடமிருந்து கிரையம் வாங்கினார்.குப்பம்மாள் கிரையம் கொடுத்த ஆவணத்தை பார்த்திருக்கிறேன். 18.04.1942 குப்பமாளும் காத்தாயிஅம்மாலும் சேர்ந்து கிரையம் வாங்கியிருக்கிறார்கள். மேற்படி கிரைய ஆவணம் தான் என்னுடைய கட்சிக்கு மூல ஆவணம் என்றால் 1934 ம் ஆண்டு செல்லத்தம்மாள் என்பவருக்கு முருகையாபிள்ளை மகாலிங்கம் பிள்ளை சேர்ந்து கிரையம் கொடுத்த ஆவணம்தான் மூலஆவணம் ஆகும். குப்பம்மாளுக்கு எப்படி பாத்தியம் என்றால் அவருக்கு பாகம் மற்றும் கிரையம் மூலம் பாத்தியம். என்னுடைய பாட்டி சிவகாமி யாரிடம் கிரையம் வாங்கினார் என்பது தெரியாமல் நான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. குப்பம்மாள் 18.06.1942 ம் தேதி சௌந்தரதம்மாள் என்பவரிடம் கிரையம் வாங்கியுள்ளார். சௌந்தரதம்மாளிடம் குப்பம்மாள் கிரயம் வாங்கிய அதே தேதியில் காத்தாயியம்மாள் பேரில் கிரைய ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். குப்பம்மாளும் காத்தாயியும் சகோதரிகள் ஆவார்கள்.

2.குப்பம்மாள் மற்றும் காத்தாயி இருவரின் தந்தை பெயர் சுப்பையா பிள்ளை ஆகும்.குப்பம்மாள் சந்தரசேகரின் தம்பதியினருக்கு 2 குழந்தைகள் அவர்களின் பெயர்கள் சுப்பையா மற்றும் கோவிந்தசாமி ஆகும். குப்பம்மாள் கணவர் சந்தரசேகர் என்பதும் அவரது வாரிசுகள் விவரத்தை எப்படி தெரிந்துகொண்டேன் என்றால் அவர்கள் ஆவணத்தில் கையெழுத்து செய்ததை வைத்து தெரிந்துகொண்டேன். சந்தரசேகரன் பிள்ளைக்கு செல்லதம்மாள் , சௌந்தரதம்மாள் என 2 மகள்கள் தான் என்றால் சரியல்ல. செல்லதம்மாள் , சௌந்தரதம்மாள் யாருடைய வாரிசுகள்

என்றால் அவர்கள் சகோதரிகள் என்று சொல்வது தவறு. சந்தரசேகரனுக்கு பெண் குழந்தைகள் இல்லை.

3. குப்பம்மாளுக்கு கிரையம் கொடுத்த சௌந்தரதம்மாளின் கணவர் பெயர் ரத்தனவேல்பிள்ளை ஆகும். செல்லத்ததம்மாள் கணவர் பெயர் பழனியாண்டி ஆகும். குப்பம்மாள் கிரையம் வாங்கிய ஆவணத்தில் கண்ட நான்கெல்லை என்னவென்றால் செல்லத்தம்மாளுக்கு மேற்கு, சந்தரசேகரன் பிள்ளைக்கு கிழக்கு, பாதைக்கு தெற்கு, வீரப்பன்பிள்ளைக்கு வடக்கு. நான் சொல்லும் நான்கெல்லை தவறு என்றால் சரியல்ல. நான்கெல்லை நான் சொல்வது போல் இல்லை என்றாலும் தெற்கு நான்கெல்லை தவறு என்றால் சரியல்ல. காத்தாயி குப்பமாளுக்கு எவ்வளவு சொத்து கிரையபாத்தியம் என்றால் ஆளுக்கு தலா 45 குழி பாத்தியம் செண்ட் கணக்கில் ஆளுக்கு தலா 15 செண்ட் பாத்தியம். காத்தாயிக்கு எந்தப்பக்கம் குப்பமாளுக்கு எந்தபக்கம் பாத்தியம் என்றால் சந்தரசேகரன் பாத்தியபட்ட சொத்திற்கு கீழ்புறம் குப்பமாளுக்கும் குப்பமாளுக்கு அடுத்த கீழ்புறம் காத்தயாயிக்கும் பாத்தியம்.

4. மேற்படி வைரேசிபுன்செய்யில் குப்பமாவிற்கு வேறு சொத்து பாத்தியம் உண்டா என்றால் சந்தரசேகரன் சொத்தையும் சேர்த்து பூர்விகம் என்று குறிப்பிடபட்டுள்ளது.சந்தரசேகரின் சொத்தில் குப்பம்மாளுக்கு வேறு எவ்வளவு சொத்து வாரிசு பாத்தியத்தில் கிடைத்தது என்றால் 135 குழி ஆகும். 135 குழி என்பது 45 செண்ட் ஆகும் . கிரையசெத்து இல்லாமல் 90 குழி செண்ட் கணக்கில் 30 செண்ட் குப்பமாளுக்கு வாரிசு பாத்தியத்தில் கிடைத்தது. கிரய படி 15 செண்டும் வாரிசு பாத்தியத்தில் 30 செண்டும் ஆக கூடுதல் குப்பமாளுக்கு 45 செண்ட் பாத்தியம் என்று சொல்கிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் மேற்கண்ட விவரத்தை கொண்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்கண்டவாறு நான் சொல்வது தவறு என்றாலும் மேற்கண்ட விவரத்தை நான் எதிர்வழக்குரையில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். 08.04.1952 ல் எனது பாட்டி சிவகாமி ஆவண எண் 803 மூலம் 50 செண்ட் கிரையம் வாங்கினார் . நான் சொல்லும் கிரைய தேதி தவறு என்றால் சரியல்ல.எனது பாட்டி 08.04.1952 ல் தான் கிரையம் வாங்கியதாக எதிர்வழக்குரை தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம்.நான் சாட்சியம் அளித்த படியே குப்பமாளுக்கு 45 செண்ட் பாத்தியம் என்ற நிலையில் எனது பாட்டி 50 செண்ட் கிரையம் வாங்கியிருப்பதால் கூடுதலாக 5 செண்ட் எவ்வாறு குறிப்பிடப்பட்டது என்றால் பூஸ்துதியில் கூடுதலா 5 செண்ட் இருந்தது.

5. எனது பாட்டி கிரையம் வாங்கிய ஆவணத்தில் குப்பம்மாள் கிரையம் வாங்கிய 15 செண்டும் மீதி 35 செண்ட் வாரிசு பாத்தியம் மற்றும் ஸ்தலத்தில் கம்மி ஜாஸ்தி உள்பட என்று கிரைய ஆவணத்தில் காட்டாப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து குப்பம்மாள் கிரையம் வாங்கிய 15 செண்ட் தவிர எஞ்சிய விஸ்தீரணத்திற்கு சந்தரசேகரனுக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் அவருக்கு பூர்வீக சொத்து குப்பம்மாள் மனைவி என்ற அடிப்படையில் வாரிசு பாத்தியத்தை

அடைந்தார். சந்தரசேகரனுக்கு 45 செண்ட் பாத்தியம் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. குப்பம்மாள் கிரையம் வாங்கிய சொத்திற்கு தற்போதைய நிலஅளவை எண் என்னவென்றால் வார்டு டி பிளாக் 10 நகரபுல எண் 47 , 3250 சதுரமீட்டர் 240 குழியில் மேற்கு பக்கம் உள்ளது.நகர புல எண் 46 மற்றும் 47 இரண்டும் சேர்ந்ததுதான் வைரேசிபுன்செய் ஆகும். நகர புல எண் 46 முழுவிஸ்தீரணம் 36 செண்டும் 47 ல் 76 செண்டும் வைரேசி புன்செய் ஆகும். பூஸ்துதியில் 240 குழி வைரேசி புன்செய்யில் ஆவணபடி 90 செண்டும் ஸ்தலத்தில் 112 செண்டும் உள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும் வைரேசி புன்செய் நகர புல எண் 46,47 சேர்ந்து 90 செண்ட் தான் உள்ளது என்றாலும் நான் கூடுதலாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

6.குப்பமாளுக்கு பூர்வீகம் என்று சொல்வதில் பாகபத்திரம் போன்ற ஆவணம் தாக்கல் செய்யமுடியுமா என்றால் இல்லை ஆனால் பூர்வீகம் என்றுதான் கிரையம் கொடுத்தார்கள். செல்லத்தம்மாளிடம் காத்தாயி கிரையம் பெற்ற பத்திரம் நான் தாக்கல் செய்திருக்கிறேன். மேற்படி ஆவணத்தின் தேதி 18.06.1942 ஆகும். நான் சொல்லும் தேதி தவறு என்றால் சரிதான். சாட்சி தற்போது 08.09.1938 என்று கூறுகிறார். மேற்படி காத்தாயி கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தில் நான்கெல்லை கோவிந்தசாமிக்கு மேற்கு, சௌந்தரதம்மாளுக்கு கிழக்கு, ரோட்டிற்கு தெற்கு, கூத்தபெருமாளுக்கு வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது அந்த ஆவணத்தில் குறிப்பிடபட்டுள்ள சொத்து வைரேசிபுன்செய் என்றால் சரிதான். வாதி மேற்படி காத்தாயி வாரிசு என்றால் சரிதான். காத்தாயி செல்லதம்மாள் மற்றும் சௌந்தரதம்மாள் ஆகியோரிடமிருந்து 30 குழி கிரையம் வாங்கினார் என்றால் சரிதான்.காத்தாயி கிரைய ஆவணத்தில் வைரேசி புன்செய் 2.70 அதில் கீழ்புறம் 90 குழி என்று போட்டுள்ளது என்றால் சரிதான். ஆகமொத்தம் காத்தாயி கிரையம் வாங்கியது 45 செண்ட் என்றால் சரிதான். நகரபுல எண் 47 ல் காத்தாயி கிரையம் வாங்கியசொத்து கீழ்புறம் வருகிறது. நான் சொல்வது தவறு என்றாலும் காத்தாயி கிரையம் வாங்கிய பகுதி மையத்தில் வருகிறது என்றால் சரியல்ல வழக்கறிஞரின் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்குவிசாரண தொடர்ச்சி ஒத்திவைக்கபடுகிறது.